**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED GRANITE MINING OVER A EXTENT OF 20.95.5 HECTARES BY M/S TAMIL NADU MINERALS LIMITED, S.NO.1193/1 (PART 5 & 16), IN KODAIKAL MOTTUR, SHOLINGHUR TALUK, RANIPET DISTRICT ON 18/07/2023 AT 11.00 A.M. IN M. ARUMUGAREDDIYAR MARRIAGE HALL, WALLAJAH ROAD, KODAIKAL MOTTUR, SHOLINGAR TALUK, RANIPET DISTRICT**

**Present:**

| | |
|---|---|
| 1. Thiru B. Vinoth Kumar | Revenue Divisional Officer,Ranipet<br>Ranipet District |
| 2. Thiru G. Ravichandran, | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board<br>Vellore District |
| 3.Tmt. Sri Valli | Special Collector<br>Social Security Scheme<br>Ranipet District |
| 4. Thiru. E. Chandrasekar | Assistant Environmental Engineer<br>Tamil Nadu Pollution Control Board<br>Ranipet District |
| 5. Thiru. J. Anand | Assistant Engineer<br>Tamil Nadu Pollution Control Board<br>Ranipet District |
| And project proponent and public of 42 numbers (Attend records is attached) | |

**Introduction:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore has welcomed the Revenue Divisional Officer, Ranipet, Government officials, Journalist and Public who were present in the public hearing meeting.

He further explained that the proposed project of mining activity falls under the activities listed under the Schedule of the Environmental Impact Assessment Notifications, 2006 and he explained about the public hearing and its process for the proposed project.

Further, he explained that the proposed Black Granite Mining Project, S.F.No.1193/1 (Part-5 & Part-16), Kodakkal village, Sholinghur Taluk, Ranipet District, by the M/s. TAMIL NADU MINERALS LIMITED is over an extent of 20.095.5 Hectares which attracts the Environmental Impact Assessment Notification Rules 2006, issued by Ministry of Environment, Forest and Climate Change, Government of India, and shall require prior Environmental Clearance (EC) as a process for obtaining EC, the public hearing is being conducted.

He further informed that public notice for the conducting public hearing for the proposed project was published in the newspaper both in "**Dinathanthi and The Times of India**", dated 10.06.2023.

He further informed that the project proponent will explain about their proposed project and environmental impact study carried out through a

PowerPoint presentation. After the presentation, the public can express their views, suggestions, and comments regarding the project by informing their name, father's name, and place. He also informed that the whole process of public hearing including the views, suggestions and comments given by the public will be recorded through videography and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Chennai for taking necessary action.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore requested The Revenue Divisional Officer, Ranipet District to inaugurate the public hearing.

**The Revenue Divisional Officer, Ranipet District:**

The Revenue Divisional Officer of Ranipet has greeted everyone and explained that a public hearing meeting is being held for the environmental clearance of the proposed 20.95.5-hectare black granite mining project of S.NO.1193/1 (PART 5 & 16) to be located in Kodaikal Village, Solingar taluk, Ranipet District in the government land. He further said that the representative of M/s Tamil Nadu Minerals Limited will explain their proposed project in detail and after the presentation, the public can express their views, suggestions, and comments regarding the proposed project.

**Thiru A. Ganesan, Deputy Manager, M/s Tamil Nadu Mineral Limited**

The Deputy Manager of M/s Tamil Nadu Minerals limited, greeted Regional Divisional officer, District Environmental Engineer, Assistant Engineers and Solinghur Thasildhar and Revenue Department officials and also greeted the environmentalists , police, journalists and also the general public who have come to express public opinion and he introduced himself as Thiru. A. Ganesan, Deputy Manager in the Department of Mines of M/s TAMIN.

He stated that M/s Tamil Nadu Minerals limited is planning to set up a 20.95.5-hectare Black Granite quarry in S.NO.1193/1 (PART 5 & 16) by Tamil Nadu Minerals Limited Company in Kodaikal Village, Solinghur taluk, Ranipet District, in Government land .Also explained that as per Environmental Impact Assessment Notifications issued by the Union Ministry of Environment Forest and Climate Change, 2006 Environmental Clearance is required as part of which Public hearing Meeting has to be conducted and with respect to that the Public Notice regarding the Public hearing Meeting was published prior to 30 days on 10.06.2023 in both English and Tamil newspaper "Dinathandhi and The Times of India" and also said that who could not see it, was informed the public through the loudspeaker via awareness vehicle regarding the public hearing meeting .

Thiru_A. Ganesan, Deputy Manager of M/s Tamil Nadu Mineral Limited also explained that the M/s Tamil Nadu Minerals Limited Company, a company wholly owned by the Tamil Nadu Government, was established in 1978. The purpose the unit is to find and mine all the minerals in Tamil Nadu and export them domestically and abroad to earn foreign exchange and to create employment opportunities. M/s TAMIN is excavating the granite, graphite, limestone, silica, sand, quartz and fire clay, laterite, vermiculite in about 10 to 15 Districts and also he has given the details about the granite polishing factories of the unit's located in Manali-Chennai , Krishnagiri- Mathepally, Madurai-Melur and the graphite mines and Beneficiation plant in Sivagangai and Following this, he displayed the location and photo of the project site to the public in the meeting.

He also informed about the details of mining permission, i.e. the company received a permission letter from the Government on 20.06.2022 for the period of 20 years. Then the unit had obtained the approval for mining plan from the Department of Geology and Mines, Chennai on 25.08.2022.

He also started to inform about the land use of the proposed project in which only 0.75 hectares of the current total area of 20.95.5 hectares will be used for the mining work and the rest of the land will be used for infrastructure, roads, green belt, waste granite stone dumping site. He also said that after 20 years, 14 hectares of land will remain as unused land

He also explained about the estimation of black granite annual mine production for the first five years. He also displayed the sensitive environmental impact areas of 15 km radius surrounding the project. After this he described the monuments surrounding the mining site, firstly the rock cuts on the right side of the Sholinghur pond, the Somanathar temple, the Choleswarar temple of Melppadi.

He also said that the national park and wild life sanctuary is not within 15 km and about 6.6 km away, the mining site has state border of Tamil Nadu and Andhra Pradesh.

He also said the groundwater and surface water will not be affected by the project and explained about the nearby water bodies is 0.16m away and the farthest Kaveripakkam (N) waterbody which is 15 kilometers away.

He also said that the area falls under Indian Seismological zone of category III, so the occurrence of earthquakes is very low. Further he said the nearby Reserved Forest is Ammur which is located at a distance of 6.2 km and the farthest Western Reserved Forest which is located at a distance of 14.81 km.

He also said that there is no need for the public to have concern about the water requirement of this project. Its water requirement is 1.5 KLD, which includes drinking water for workers, diamond wire cutting, dust mitigation on the road, and construction of green ring are only required so that there will be no shortage of water in that area. He said that the height of 91 meter mine it will be taken only 40 meters from the top so there will be no danger to the ground water.

Following this, he explained that to analyze the ambient air quality, 12 parameters were examined at 8 places from the period of January 2023 to April 23, 2023 and according to them, it was within the national ambient air quality standards.

He also explained about the sound and soil quality and explained that all these were subject to standards.

He also talked about the effects of this project on noise, dust and water and its preventive measures. The main aspect of this is that it is profitable if more blasting is done in stone quarry, but in this case if less blasting is done in granite quarry, it is profitable. He also assured that there will be less vibration and air pollution due to the use of modern advanced techniques such as balloon technique, rock breaking powder, wire saw cutting, wet drilling method, Tamrac drilling method used by this company.

Further he displayed the activities carried out by M/s Tamil Nadu Minerals Limited through video.

In the conclusion of the meeting, he said that the project may provide indirect employment for the people of nearby villages, Royalty Fees of Rs. 3859 per cubic meter, fund to district mineral foundation of Rs.1158 per cubic meter, donations to green fund and it will earn foreign exchange for the government by exporting the granites to the countries like China and Japan

Following this, he concluded his speech by saying that people can express their views directly.

**Thiru. Ayyappan, Kodaikkal Village:**

Thiru. Ayyappan asked whether the project will provide employment opportunities to the people of Kodaikkal.

**Deputy Manager:**

Deputy Manager had stated that they will provide employment opportunities if they possess driving license or mines safety certificate from Directorate General of Mines Safety.

**Thiru.K. Thavamani, Kodaikkal village**

Thiru. K. Thavamani has expressed his grievances there was already a stone named venkalakal on the hill of Kodaikal village but due to the minig projects it was completely destroyed. Also further due to the breaking of the rock the stones are being thrown down due to which the heat will increase and the rain will decrease. He also expressed his concern that the village used to have lots of grass and air flow now it is affected by the mining project. He also said that Kodaikal, which is a symbol of the village, will be endangered by this project. He also said that the project will increase the heat and decrease the rainfall and requested that the company should ensure that this project does not cause any harm to the people.

**Deputy Manager:**

Deputy Manager has Agreed there is a monument called Kodaikkal. He said that this symbol is located almost 800 North of the mining lease number 24.30.8 given to his company by the Government and this project has been going on since 2007 so far there has been no damage. He said that the company will work to protect the symbol. Apart from that, he assured that there is no need to worry about the safety because the unit will employ mines safety manager and employees who are certified by the Union Government in mines safety. He also said that the water coming during the project will be sent to Kanmai and will be utilised for the agricultural purpose. He also said that the unit will dump stones and rocks in places where there are no rocks and get permission from the Government so that the surface water will not be polluted and once again reiterated that the monument will not be damaged.

**Thiru. Hemachandran, Village Panchayat President, Kodaikkal village**

Thiru. Hemachandran, Village panchayat president, Kodaikkal village had exclaimed that most of the public did not attend the meeting as the unit did not given proper information regarding the public hearing meeting to the people. He also requested to provide employment opportunities to many educated unemployed youths in their village and further requested to provide financial assistance to the temples and to repair and restore the idols in the temples in their village. Further, he asked to give instructions to the unit's lorry driver to restrain from speeding the vehicles while crossing the road and requested to lay a cement road for half a kilometer or one kilometer from the project area to prevent the spreading of dust.

**Deputy Manager:**

Deputy Manager had once again reiterated that they had given public notice through Tamil Nadu Pollution Control Board in **"Dinathanthi and The Times of India"**, prior thirty days regarding the public hearing meeting and also through loudspeakers via Awareness vehicle. He also said he will convey the matters to their Head Office regarding the repair and restoration of the idols in the temple, and assured to create employment opportunities. With respect to the speeding of vehicles, he guaranteed to ensure safety by giving instructions to drivers and also by keeping signboards and signals in the road.

**Thiru.K. Thavamani, Kodaikkal village**

Thiru.K. Thavamani had informed that the shortcut route to Sholinghur has been covered with rocks and dust and requested to repair the same.

**Deputy Manager:**

Deputy Manager informed that they will visit the spot and take appropriate action in consultation with the District Administration.

**Thiru.Venkatesan, Kodaikkal village**

Thiru. Venkatesan, Kodaikkal village had informed that he is working as an advocate in the Madras High Court. He complained that the source of water in their village has been depleted and destroyed completely due to mining activities and also explained due to the usage of explosives in the stone quarries, the temple in their villages is getting damaged and he used to feel the vibrations in his house due to which there are the development of cracks in his house. Further, he suggested to use modern machinery and techniques, instead of using explosives for mining and further he said that from this project there is no benefit to his village and he opposed the project.

**Deputy Manager:**

Deputy Manager had clarified that this project is a Black Granite Mining Project and not a Stone Quarry Project. In this project instead of explosives the project uses advance techniques such as balloon technique, rock breaking powder, and wire saw cutting hence the proposed Black granite project will not cause vibration effects and dust emission. Hence he assured that operation of this project will not cause any ill effects on the Environment.

**Thiru. D. Subramani, Kodaikkal Village**

Thiru D. Subramani of Kodaikkal Village has informed that the trucks which carry granite stone in the Kodaikkal – Kalaalakuppam route cause disturbance and difficulties to both two-wheelers or four-wheelers in this route.

He also requested either to provide an alternative route to commutation or provide appropriate instructions as to operate the vehicles slowly and take necessary action on over speeding drivers.

**Deputy Manager:**

Deputy Manager assured that appropriate departmental action will be taken on over speeding drivers and appropriate advice will be given to the drivers to drive carefully and slowly in the turnings of Kodaikkal – Kalaalakuppam route.

**Thiru. Meghanathan, Kodaikkal Village**

Thiru Meghanathan, Kodaikkal Village said that the stone quarry has not provided any employment and also he opined that due to the mining project, there will be no rainfall in their village in the future and also he requested not to destroy nature and he opposed the project.

**Deputy Manager:**

Deputy Manager had clarified that this project is a Black Granite Mining Project and not a Stone Quarry Project once again. He also informed that the unit will take only about 10 to 12 loads of granite per month and use water sprinkingly methods so as to control the fugitive emissions and protect the Environment.

**Thiru.Venkatesan, Kodaikkal village**

Thiru.Venkatesan, Kodaikkal Village expressed his grievances that their Panchayat Union has around 11 villages, but only few number of people have attended the meeting. As information about public hearing meeting was not communicated. Also questioned on what basis the decision will be taken by based on the opinions of these fifty people alone.

Further no questions were asked from public sides so thereafter, the District Environmental Engineer, TNPCB, Vellore delivered the vote of thanks and the public hearing came to an end.

31.07.23

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Vellore**

31/07/23

**Revenue Divisional Officer**
**Ranipet**
**Ranipet District**

**இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் வட்டம், தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனம், ச.எண் 1193/1 (பகுதி 5 & 16) கொடைக்கல் கிராமம், 20.95.5 ஹெக்டர் பரப்பளவில், உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கம் தொடர்பாக அன்று 18/07/2023 செவ்வாய் கிழமை, முற்பகல் 11.00 மணி , கொடைக்கல் மோட்டூர். சோளிங்கர் வட்டம். இராணிப்பேட்டை மாவட்டம் M.ஆறுமுகரெட்டியார் திருமண மண்டபம். வாலாஜா ரோடு கொடைக்கல் மோட்டூர். சோளிங்கர் வட்டம். இராணிப்பேட்டை மாவட்டம். நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்**

| | |
|---|---|
| 1. திரு B. வினோத்குமார் | வருவாய் கோட்டாட்சியர்,இராணிப்பேட்டை<br>இராணிப்பேட்டை மாவட்டம் |
| 2. திரு. கு. இரவிச்சந்திரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர் |
| 3.திருமதி. ஸ்ரீ வள்ளி | தனித்துணை ஆட்சியர்<br>சமூக பாதுகாப்பு திட்டம்<br>இராணிப்பேட்டை மாவட்டம் |
| 4.திரு. ஏ.சந்திரசேகர் | உதவி சுற்றுசூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>இராணிப்பேட்டை மாவட்டம் |
| 5.திரு. ஜெ. ஆனந்த் | உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>இராணிப்பேட்டை மாவட்டம் |
| தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இராணிப்பேட்டை மாவட்டம் - 42 எண்ணிக்கைகள் (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) | |

**கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான அறிமுகம் - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள வருவாய் கோட்டாட்சியர், அரசு அதிகாரிகள் பத்திரிகையாளர் மற்றும் பொதுமக்கள் வரவேற்றார். மேலும் அவர் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கைகள், 2006 மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் பற்றி விளக்கினார்.

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் வட்டம், தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனம், ச.எண் 1193/1 (பகுதி 5 & 16) கொடைக்கல்

கிராமம், சோளிங்கர் வட்டம் , இராணிப்பேட்டை மாவட்டம், 20.95.5 ஹெக்டர் பரப்பளவில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 20.95.5 கிரானைட் சுரங்கம் திட்ட செயல்பாடானது, மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கைகள், 2006ன் படி சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டியுள்ளது மற்றும் அதன் ஒரு பகுதியாக , இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான பொது அறிவிப்பானது 10.06.2023 நாளிட்ட "தினத்தந்தி மற்றும் டைம்ஸ் ஆஃப் இந்தியா" ஆகிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், அவர் கூறுகையில், முதலில் தொழிற்சாலை பிரதிநிதி, இங்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கத் திட்டம் குறித்தும், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் அதை தவிர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்குவார் எனவும், அதன் பின்னர் பொது மக்கள் ஒருவர் பின் ஒருவராக அவர்களது பெயர், தந்தை பெயர் மற்றும் ஊரின் பெயரை தெரிவித்துவிட்டு, திட்டம் தொடர்பான அவர்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் எனக்கூறினார். நிறைவாக, மக்களின் கருத்துக்களுக்கு தொழிற்சாலை பிரதிநிதியானவர் தக்க பதிலுரை வழங்குவார். இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் வீடியோ மூலம் பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி பெறவேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவித்தார்.

அதன்பின் அவர், இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களை கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்</u> :

இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு இராணிப்பேட்டை மாவட்டம்,சோளிங்கர் வட்டம் ,கொடைக்கல் கிராமம் ,ச.எண் 1193/1 (பகுதி 5 & 16), அரசு புறம்போக்கு நிலத்தில் அமையவிருக்கும் கருப்பு கிரானைட் சுரங்கத் திட்டம் சுற்றுசூழல் அனுமதிக்காக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவதாக கூறினார் மேலும் இதைக்குறித்து தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவன பிரதிநிதி, உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கம் திட்டம் குறித்து விளக்கியபின் பொது மக்கள் ஒருவர் பின் ஒருவராக அவர்களது கருத்தை தெரிவிக்குமாறு கூறினார்.

**திரு.ஏ.கணேசன் ,தமிழ்நாடு கனிம வள நிறுவனத்தின் துணை மேலாளர்:**

தமிழ்நாடு கனிமவள நிறுவனத்தின் ,துணை மேலாளர் அவர்கள் துணைக் கோட்டாட்சியர் , மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், உதவி பொறியாளர்கள் மற்றும் சோளிங்கர் வட்டாட்சியர் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்க வந்திருக்கும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் காவல்துறை நண்பர்கள்,பத்திரிகையாளர்கள் ,ஆகியோருக்கு வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார் மேலும் தனது பெயர் திரு ஏ.கணேசன் ,சுரங்க துறையில் ,துணை மேலாளராக இருப்பதாக அறிமுகம் செய்து கொண்டார்

மேலும் தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனம், ச.எண் 1193/1 (பகுதி 5 & 16) கொடைக்கல் கிராமம், சோளிங்கர் வட்டம் , இராணிப்பேட்டை மாவட்டம், 20.95.5 ஹெக்டர் பரப்பளவில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 20.95.5 கிரானைட் சுரங்கம் திட்ட செயல்பாடானது அரசு புறம்போக்கு நிலத்தில் வெட்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கைகள், 2006ன் படி சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டியுள்ளது அதன் ஒரு பகுதியாக இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான பொது அறிவிப்பானது 10.06.2023 நாளிட்ட "தினத்தந்தி மற்றும் டைம்ஸ் ஆ∴ப் இந்தியா" ஆகிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன இதை பார்க்க முடியாதவர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு கருத்தை கேட்பு கூட்டம் நடைபெறபோவதை அறிவித்ததாக கூறினார் .

மேலும் தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனமானது, தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான நிறுவனம் ,இவை 1978 துவக்கப்பட்டது.இதன் நோக்கம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கனிமங்களையும் கண்டறிந்து வெட்டி எடுத்து அதனை உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணி ஈட்டுதல் , வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கம் என கூறினார் .மேலும் தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனமானது சுமார் பத்து முதல் 15 மாவட்டங்களில் கிரானைட், கிராபைட் ,சுண்ணாம்புக்கல் ,சிலிக்கா ,மணல் குவார்ட்ஸ் மற்றும் தீக்களிமண் ,லேட் ரைட்,வெர்மிகுலைட் ஆகின வெட்டி எடுக்கின்றது எனவும் மேலும் இந்நிறுவனத்தின் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலைகள் மணலி - சென்னை கிருஷ்ணகிரி-மாதேப்பள்ளி ,மதுரை-மேலூர் ஆகிய இடங்களில் இருப்பதாக கூறினார் .இதோடு கிராபைட் சுத்திகரிக்கும் ஆலை சிவகங்கையில் இருப்பதாக தெரிவித்தார் . இதன் தொடர்ச்சியாக திட்ட தளத்தின் அமைவிடம் மற்றும் புகைப்படத்தை பொதுமக்களுக்கு காண்பித்து விளக்கினார் .

மேலும் சுரங்க அனுமதி விவரங்களை பற்றி தெரிவித்தார் அதாவது 20 ஆண்டுகளுக்கு நடத்துவதற்காக இந்நிறுவனம் அரசிடம் 20.06.2022 அன்று அனுமதி கடிதம் பெற்றது என்றும் . மேலும் இதைத்தொடர்ந்து புவியியல்

மற்றும் சுரங்கத்துறை ,சென்னையிடம் இருந்து சுரங்க திட்டத்திற்கு 25.08.2022 அன்று ஒப்புதல் பெற்றது என தெரிவித்தார்

மேலும் சுரங்க பணியின் நில பயன்பாடு பற்றி கூறத் தொடங்கினார் இதில் தற்போதைய மொத்த 20.95.5 நிலப்பரப்பில் 0.75 ஹெக்டேர் மட்டுமே சுரங்க பணிக்கு உபயோகப்படுத்தப் போவதாகவும் மீதமுள்ள பகுதிகள் அனைத்தும் உள்கட்டமைப்பு ,சாலைகள் ,பசுமை வளையம் ,கிரானைட் கழிவு கற்கள் கொட்டும் இடம் என நிலத்தின் பயன்பாட்டை பற்றி கூறினார் .மேலும் 20 ஆண்டுகள் கழித்து 14 ஹெக்டர் நிலப் பகுதி பயன்படுத்தாத நிலமாக அப்படியே இருக்கும் என்பதை தெரிவித்தார்.மேலும் முதல் ஐந்தாண்டு வருடாந்திர சுரங்க உற்பத்தியின் கருப்பு க்ரானைட் மதிப்பீடு பற்றி விளக்கினார் .இத்திட்டத்தின் 15 கிலோமீட்டர் ஆரமுள்ள சுற்றுச்சூழல் உணத்திறன் பகுதிகளை காண்பித்தார்.இதைத் தொடர்ந்து சுரங்க தளத்தின் சுற்றுச்சூழல் விவரங்களை விவரித்தார் இதில் முதலாவதாக தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்கள் அமைய பெற்றுள்ள இடமான சோளிங்கர் குளத்தின் வலது புறத்தில் உள்ள பாறைகள்வெட்டுகள் ,சோமநாதர் கோயில் மேல்பாடி ,சோழேஸ்வரர் கோவில் மேல்பாடி ஆகியவை இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் தேசியப் பூங்கா வனத்துறை சரணாலயம் 15 கிலோ மீட்டர் எல்லைக்குள் இல்லை எனவும் மாநிலம் தேசிய எல்லை - தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேஷ் மாநில எல்லை 6.6 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தினால் தண்ணீர் நிலைகள் பாதிக்குமா என்று ஐயம் கொள்ளவேண்டாம் என கூறினார் .மேலும் அருகில் உள்ள நீர்நிலைகளை பற்றி விவரித்தார் திட்ட தளத்திற்கு அருகே உள்ள குளம் 0.16மீ தூரம் மற்றும் அதிகபட்சமாக காவேரிப்பாக்கம்(N) ஏரி 15 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது என தெளிவுப்படுத்தினார்.

மேலும் இந்தப் பகுதி நில அதிர்வு மண்டலம் மிதமான தாக்கம் iii வகைப்பாட்டில் வருகிறது எதனாக நில அதிர்வு வருவது மிக மிக குறைவு என கூறினார். மேலும் பாதுகாக்கப்பட்ட காடுகள் இத்திட்டத்தில் திட்டத்தின் அருகில் அம்மூர் பாதுகாக்கப்பட்ட காடுகள் 6.2 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளூர் மேற்கு பாதுகாக்கப்பட்ட காடுகள் 14.81 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளதாக கூறினார்.

மேலும் இத்திட்டத்தின் நீர் தேவையை குறித்து பொதுமக்கள் ஐயப்பாடு தேவையில்லை என கூறினார் இதன் நீர் தேவையானது 1.5 KLD ,அதாவது குடிநீர் மற்றும் உட்புறதேவை, வைர கம்பியறுத்தல் ,சாலை மீது தூசியினை தணித்தல்,பசுமை வளையும் அமைத்தல் ஆகியவற்றிற்கு மட்டுமே தேவைப்படுகிறது இதனால் அந்த பகுதியில் நீர் பற்றாக்குறை எதுவும் ஏற்படாது என்றும்,இத்திட்டத்தை பற்றி விளக்கினார் அதாவது மலையின்

மொத்த உயரம் 91 மீட்டர் சுரங்கம் மேலிருந்து 40 மீட்டர் மட்டுமே எடுக்கப்படும் என்பதனால் நிலத்தடி நீருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என கூறினார்.

இதைத்தொடர்ந்து சுற்றுப்புற காற்றின் தரத்தை பகுப்பாய்வு செய்ய இடைப்பட்ட காலமான ஜனவரி 2023 முதல் ஏப்ரல் 23 வரை 8 இடங்களில் 12 பண்பளவுகளை ஆராயப்பட்டது எனவும் இவற்றின்படி தேசிய சுற்றுப்புற காற்றின் தரத்திற்கு உட்பட்டே இருந்தது என கூறினார்.

மேலும் ஒலி மற்றும் மண்ணின் தரம் குறித்து விளக்கினார் இவை அனைத்தும் தரத்திற்கு உட்பட்டிருந்தது என விளக்கினார்.

மேலும் இத்திட்டத்தினால் ஒலி ,தூசி ,நீர் ஆகியவற்றின் மீது ஏற்படும் தாக்கங்கள் மற்றும் இதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பேசினார் .இதில் முக்கிய அம்சமாக கல் குவாரியில் அதிகமாக வெடி வைத்தால் லாபம் எனவும் ஆனால் கிரானைட் குவாரியில் வெடி குறைவாக வைத்தால் லாபம் . மேலும் இந்நிறுவனம் பயன்படுத்தும் நவீன உயரக முறைக்களான பலூன் டெக்னிக் , ராக் பிரேயக்கிங்க் பவுடர் ,வயர் சா கட்டிங் ,வெட் ட்ரில்லிங் முறை,தாம்ரக் (TAMRAC)ட்ரில்லிங் முறை உபயோகிக்கப்படுவதால் நில அதிர்வு காற்று மாசுப்பாடு போன்றவை எதுவும் ஏற்படாது எனவும் உறுதியளித்தார்

மேலும் தி/ள் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் நிறுவனம் அதன் செயல்பாடுகளை குறித்து காணொளியை காண்பித்தார்

இக்கூட்டத்தின் முடிவுரையாக இத்திட்டத்தின் பயன்களாக அருகில் உள்ள கிராமத்தை சார்ந்தவர்களுக்கு மறைமுக வேலை,உரிமை தொகையாக ரூபாய் 3859 கன/மீட்டர் ,மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு 1158 / கன மீட்டர் ,பசுமை நிதியம், மேலும் உற்பத்தியாகும் கிரானைட் சீனா , ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால் அரசுக்கு அந்நிய செலாவணியை ஈட்டி தரும் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் தங்கள் கருத்துக்களை நேரடியாக தெரிவிக்கலாம் என தனது உரையை முடித்துக் கொண்டார்.

<u>திரு. ஐயப்பன்,கொடைக்கல் கிராமம்:</u>

திரு. ஐயப்பன் அவர்கள், எங்கள் கிராம மக்களுக்கு இத்திட்டத்தினால் வேலை வாய்ப்பு கிடைக்குமா என வினாவினர்

<u>துணை மேலாளர்:</u>

இத்திட்டத்தின் மூலமாக ஓட்டுநர் உரிமம் அல்லது சுரங்க பாதுகாப்பு சார்ந்த சான்றிதழ் பெற்றிருந்தால் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று கூறினார்

<u>திரு. K .தவமணி கொடைக்கல் கிராமம்:</u>

திரு.K.தவமணி அவர்கள், கொடைக்கல் கிராமத்து மலையில் ஏற்கனவே வெண்களக்கல் என்று ஒன்று இருந்தது இக்கற்கள் உடைப்பதனால்

இறக்கையாகவே அந்த கல் இல்லாமல் போய்விட்டது.மேலும் பாறையை உடைப்பதனால் அந்த கற்கள் கீழே போடுகின்றனர் இதனால் வெப்பம் அதிகரித்து மழையை குறைப்பதாக தனது ஆதங்கத்தை தெரிவித்தார் மேலும் கிராமத்தில் முன்பு நிறைய புற்கள் இருக்கும் ,காற்றோட்டம் இருக்கும் இப்பொழுது இவை இல்லாமல் போய்விடும் என்றார். மேலும் கிராமத்து சின்னமாக விளங்கும் அருகில் இருக்கும் கொடைக்கல், இத்திட்டத்தினால் சின்னத்திற்கு ஆபத்து வரும் என்றார். மேலும் இத்திட்டத்தினால் வெப்பம் அதிகரிக்கும் , மழைக்குறையும் மேலும் மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இந்நிறுவனம் இதை உறுதி செய்ய வேண்டும் என கூறினார்.

## துணை மேலாளர்:

கொடைக்கல் என்னும் சின்னம் உள்ளது என ஒப்புக்கொண்டார் ஏற்கனவே அரசு தங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சுரங்க குத்தகை எண் 24.30.8 எல்லையில் இருந்து கிட்டத்தட்ட 800 மீட்டர் வடக்கே இச்சின்னம் உள்ளதாக தெரிவித்தார் மேலும் இத்திட்டம் 2007 இல் இருந்து நடைபெற்றுள்ளது , ஆனால் மேற்கூறிய திட்டத்தினால் இதுவரை எந்த ஒரு சேதாரமும் இல்லை எனவும் .மேலும் அந்த சின்னம் பாதுகாக்கும் வகையில் இந்நிறுவனம் செயல்படும் என கூறினார். அவை மட்டும் இல்லாமல் சுரங்க பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசிடம் இருந்து சான்றிதழ்கள் பெற்றவர்களான சுரங்க பாதுகாப்பு மேலாளர் மற்றும் ஊழியர்களையே பணியில் அமர்த்த உள்ளதாகவும் அதனால் பாதுகாப்பு குறித்து அச்சமடைய தேவையில்லை என உறுதி அளித்தார் . மேலும் இப்பணியின் போது வரும் தண்ணீர் கண்மாய்க்கு செலுத்தி விவசாயத்திற்கு தரப்போவதாக கூறினார். மேலும் கற்களை ,பாறைகள் இல்லாத இடத்தில் அரசு அனுமதி பெற்று கொட்டுகிறோம் இதனால் நீரும் மாசுபடாது ,நினைவுச்சின்னமும் சேதமடைய வாய்ப்பில்லை என கூறினார்.

## திரு. ஹேமச்சந்திரன், ஊர் தலைவர் ,கொடைக்கல் கிராமம்:

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இக்கூட்டத்தில் பொதுமக்கள் பெரிதும் கலந்து கொள்ளவில்லை எனவும் தாங்கள் முறையாக செய்தியை விளம்பர படுத்தவில்லை என கூறினார். மேலும் படித்த வேலை இல்லாத இளைஞர்கள் தங்கள் கிராமத்தில் நிறைய இருக்கிறார்கள் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும் எனவும். தங்கள் ஊரில் உள்ள கோயில்களுக்கு பொருளுதவி தருமாறும் மற்றும் இக்கோவிலில் உள்ள சிற்பங்களை சீர்செய்து தருமாறு கேட்டுக்கொண்டார். மேலும் இப்பகுதிகளில் சாலை விபத்து அதிகம் ஏற்படுவதாகவும், இங்கே சாலை விபத்து ஏற்படாமலிருப்பதற்கு சாலை விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டார். இந்நிறுவனதின் வாகனமானது சாலையை கடக்கும் போது நிதானத்தை கடைப்பிடிக்க ஓட்டுநரிடம் அறிவுறுத்தும் படி கேட்டுக் கொண்டார். மேலும் தூசி பரவாமல் தடுப்பதற்காக இத்திட்டம் அமையவுள்ள பகுதில் சுமார் 1/2 அல்லது 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

துணை மேலாளர்:

இதுகுறித்து தங்கள் நிறுவனமானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வாயிலாக, "தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆஃப் இந்தியா" நாளிதழில்களில் 30 நாட்களுக்கு முன்பாகவே இக்கூட்டத்தின் விவரத்தை தெரிவிக்கப்பட்டது என்பதையும் மற்றும் உள்ளூர் பொது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலமாகவும் இக்கூட்டத்தின் விவரத்தை தெரிவித்தாக கூறினார். கோவில் சிற்பத்தை சீர் செய்து தருமாறு கேட்டுக்கொண்டதை, தலைமை அலுவலகத்திற்கு தெரிவிப்பதாக கூறினார். மேலும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருவதாகவும், தங்கள் ஓட்டுநர்களுக்கு வாகனத்தை இயக்கம் பொழுது நிதானத்தை கடைபிடிக்க அறிவுறுத்தப்படும் மற்றும் பெயர் பலகைகள், சிகப்பு மற்றும் பச்சை விளக்குகள் வைத்து சாலை பாதுகாப்பை உறுதி செய்கிறோம் என்று உறுதியளிதார்.

திரு. கே.தவமணி கொடைக்கல் கிராமம்:

திரு. கே.தவமணி அவர்கள், சோளிங்கர் செல்ல இருந்த குறுக்கு பாதை பாறைகள் மற்றும் தூசிகளால் மூடப்பட்டுள்ளது, அதனை சீர் செய்து தர வேண்டும்.

துணை மேலாளர்:

அந்த இடத்தை பார்வையிட்டு நாங்கள் மாவட்ட நிர்வாகத்திடம் ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்.

திரு. வெங்கடேசன் ,கொடைக்கல் கிராமம்:

திரு. வெங்கடேசன் அவர்கள், தான் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருவதாக அறிமுகம்படுத்திக்கொண்டார். தங்களுடைய பகுதியில் நீர் ஆதாரம் நன்றாக இருந்தவை, ஆனால் இப்பொழுது நீர் ஆதாரம் இல்லாமல் போய்விட்டதாகவும். மேலும் இக்கல்குவாரியில் வெடி வைப்பதினால் ஏற்படும் அதிர்வினால் இப்பகுதில் உள்ள கோவில்கள் சேதமடைகிறது மற்றும் தன்னுடைய வீட்டில் தினமும் அதிர்வு ஏற்படுகிறது மேலும் இவ்அதிர்வுகளால் தங்கள் வீட்டில் ஆங்காங்கே விரிசல்கள் வந்துவிட்டது. எனவே வெடி வைப்பதை தவிர்த்து, நவீன இயந்திரத்தை பயன்படுத்தலாமே என கேட்டார். இத்திட்டத்தினால் எங்கள் கிராமத்திற்கு என்ன நன்மை இருக்கிறது என்று கேள்வி தொடுத்தார். மேலும் அவர்களுக்கு இக்கல்குவாரி வேண்டாம் என கூறினார்.

துணை மேலாளர்:

இத்திட்டமானது கல்குவாரி இல்லை, கிரானைட்குவாரி என தெளிவுபடுத்தினார். மேலும் கிரானைட்குவாரியில் வெடிகள் வைப்பது இல்லை என்பதையும், நவீன உயரக முறைக்களான பலூன் டெக்னிக் , ராக் பிரேயக்கிங்க் பவுடர் ,வயர் சா கட்டிங் உபயோகிக்கப்படுவதால் இத்திட்டதினால் நில அதிர்வு எதுவும் ஏற்படாது எனவும். மேலும் கல்குவாரி

மண்குவாரியில் வரும் அளவிற்கு கிரானைட் வரையில் அதிர்வு சத்தமும் தூசியும் ஏற்படாது என்றும், இத்திட்டதினால் சுற்றுச்சூழல்க்கு எந்த பாதிப்பும் இல்லாமல் நடத்த படும் என்பதையும் உறுதி அளித்தார்.

<u>திரு. டி. சுப்பிரமணி, கொடைக்கல் கிராமம்:</u>

திரு. டி. சுப்பிரமணி அவர்கள், கொடக்கல் - கல்லாலகுப்பம் செல்லும் சாலையில், கிரானைட் கல் ஏற்றி செல்லும் லாரிகள் செல்வதால் 2 சக்கர வாகனங்கள் மற்றும் 4 சக்கர வாகனங்கள் போக முடியவில்லை எனவும். கிரானைட் கல் ஏற்றி செல்லும் லாரிகள் பொறுமையாக செல்ல வேண்டும் இல்லையென்றால் மாற்றுப்பாதையை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும். மேலும் வேகமாக செல்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் தகுந்த அறிவுரைகள் வழங்க வேண்டும் என கூறினார்.

<u>துணை மேலாளர்:</u>

லாரிகளை வேகமாக இயக்கும் ஓட்டுனர்கள் மீது கடுமையான துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் கொடக்கல் - கல்லாலகுப்பம் செல்லும் சாலையில் வளைவுகளில் மெதுவாக செல்ல அறிவுவரை வழங்கப்படும் என தெரிவித்தார்.

<u>திரு மேகநாதன் ,கொடைக்கல் கிராமம்:</u>

திரு மேகநாதன் அவர்கள், இக்கல்குவாரியால் தங்களுக்கு வேலைவாய்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் இக்கல்குவாரியால் மழை இல்லாமல் போய்விடும் எனவும் இயற்கையை அழிக்க வேண்டாம் எனவும் கூறினார். மேலும் இக்குவாரிக்கு தாங்கள் எதிர்ப்பு தெறிவிப்பதாக கூறினார்.

<u>துணை மேலாளர்:</u>

இத்திட்டமானது கல்குவாரி இல்லை, கிரானைட்குவாரி என மீண்டும் தெளிவுபடுத்தினார். இக்குவாரியில் மாதம் 10 முதல் 12 லோடு கிரானைட் மட்டுமே எடுப்பதாகவும். தூசுகள் பரவாத வகையில் தண்ணீர் தெளித்து சுற்றுச்சூழல் பாதிக்காதவகையில் இயக்கப்படும் என்று கூறினார்.

<u>திரு. வெங்கடேசன் ,கொடைக்கல் கிராமம்:</u>

திரு. வெங்கடேசன் அவர்கள், பஞ்சாயது ஒன்றியத்தில் சுமார் 11 கிராம் உள்ளது. ஆனால் இக்கூட்டத்திற்கு வந்த மக்கள் கூட்டமானது குறைவாக இருப்பதாகவும் அனைவருக்கும் தகவல் அளிக்கப்படவில்லை என தெரிவித்தனர். மேலும் இந்த ஐம்பது பேர் கொண்ட கூட்டத்தின் கருத்தை வைத்து எவ்வாறு முடிவுசெய்வீர்கள் என்று கேள்வி எழுப்பினர். மேலும் இக்குவாரிக்கு தாங்கள் எதிர்ப்பு தெறிவிப்பதாக கூறினார்.

இதன்பின் எந்தவொரு கேள்விகளும் பொதுமக்களும் கேட்கப்படவில்லை அதனால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர் அவர்களின் நன்றியுரை அளித்ததுடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது நிறைவுக்கு வந்தது.

31.07.23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
வேலூர்

31/07/23

வருவாய் கோட்டாட்சியர்,
இராணிப்பேட்டை,
இராணிப்பேட்டை மாவட்டம்